# மாணவப் பருவத்தில் நான்!

வாசிக்க: பிரசங்கி 12:1-14

***“முதலாவது இறையரசையும் கடவுளுக்கு ஏற்புடையவற்றையும் தேடுங்கள்; அப்பொழுது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக்கொடுக்கப்படும்” (மத் 6:33)***

மாணவப் பருவத்தில் படிப்பில் முழுவதும் ஈடுபடவேண்டியவர்கள், ஜெபத்திலும், தியானத்திலும், திருப்பணியிலும் முழுக்க முழுக்க ஈடுபாடுகொள்ளமுடியுமா என்பது வாலிபருக்கும் பெற்றோருக்கும் எழும் சந்தேகம்.

எனது கல்லூரி நாட்களின் தியான வாழ்க்கை பற்றிச் சற்று எழுதுகிறேன். 1962ஆம் ஆண்டு பாளையங்கோட்டை புனித யோவான் கல்லூரியில் புகுமுக வகுப்பு (PUC) படித்துக்கொண்டிருக்கும்போது இதே நாளில் இயேசு என்னை மீட்டெடுத்தார். 1963 முதல் 1968 வரை காரைக்குடி அழகப்பா பொறியியல் கல்லூரி யில் B.E.யும் 1968 முதல் 1970 வரை சென்னை இந்தியத் தொழில் நுட்பக் கல்லூரியில் (IIT) M.TECH.உம் படித்து முதல் வகுப்பில் தேறினேன். கல்லூரியில் படித்த இந்த 8 ஆண்டுகளையும், இயேசுவோடு இயேசுவுக்காகச் செலவிட்டது பெரும் பாக்கியம்.

அதிகாலை 4 அல்லது 5 மணிக்கு எழுந்து துதியுடன் ஒருமணி நேரம் ஜெபிப்பேன் (சங் 143:8). பின்பு அரைமணி நேரம் வேதவாசிப்பு. இந்த அதிகாலை அமைதி வேளையைப் பரீட்சை நாட்களிலும் விடுவதில்லை. சில நாட்களில் இரவு 12 முதல் 1 மணிவரை ஜெபிப்பேன். கல்லூரி செல்லும்போது கடவுளைத் துதித்துக்கொண்டே செல்வேன். பாக்கெட்டில் எப்போதும் உள்ள சிறிய ஆங்கிலப் புதிய ஏற்பாட்டில் ஒரு வசனத்தை வாசித்து, அதைச் சுவைத்துக்கொண்டிருப்பேன் (சங் 119:97).

மாலை நேரங்கள் எப்பொழுதும் கடவுளுக்கே! 6 முதல் 7 மணிவரை கல்லூரிக்கு அருகிலுள்ள ஒரு காட்டிற்குச் சென்று தனி ஜெபத்திலும், இதய ஆராய்ச்சியிலும் செலவிடுவேன். 7 முதல் 8 வரை மாணவருடன் கூட்டு ஜெபம் இருக்கும். தனி ஜெபத்தில் கிடைத்த திருமறைச் சத்தியங்களைத் தினமும் இவ்வேளையில் பகிர்ந்துகொள்வேன். எங்கள் எல்லாருடைய வளர்ச்சிக்குப் பேருதவியாய் இருந்தது இம்மாலைக் கூடுகைதான். காரைக்குடியில் நான் துவங்கிய கல்லூரி ஜெபக்குழு கடந்த 50 ஆண்டுகளாக (1963-2012) சற்றும் பின்தங்காமல் வளர்ந்துகொண்டே யிருக்கிறது. படித்துவிட்டு, இரவில் 10.30 அல்லது 11 மணிக்குப் படுக்கச் செல்லும் போது ஒரு சங்கீதத்தை வாசித்து அதையே நினைத்துக்கொண்டு தூங்கிவிடுவேன். தூக்கம் இன்பமாயிருக்கும் (சங் 119:55).

வாரயிறுதியில் கிராம சந்திப்பு ஊழியத்திற்குச் செல்வோம். வாரத்திற்கொருமுறை நோன்பு ஜெபம் உண்டு. இன்று ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் பெரிய அளவில் நடைபெறும் எல்லா ஊழியங்களுக்கும் அந்த மாணவ நாட்களிலேயே கடவுள் சிறிய அளவில் எங்களுக்குப் பயிற்சி கொடுத்து வந்திருக்கிறார் என்று நினைக் கும்போது என் இதயம் நன்றியால் ததும்புகிறது.



*வாலிப நாளில் இயேசுவைக் கண்டேன்,*
*வாஞ்சையுடன் என்னைத் தேடி வந்தார்;*
*எதற்குமே உதவா என்னையும் கண்டெடுத்தார்,*
*இயேசுவின் அன்பை நான் என் சொல்லுவேன்!*

*— சகோதரி சாராள் நவரோஜி*